துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு

ஒருங்கிணைந்த சேவையில் அலுவலக ஊழியர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஒருங்கிணைந்த சேவையில் அலுவலக ஊழியர் சேவையின் III ஆம் தரத்திலுள்ள 06 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.

03. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிவத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், அலுவலக ஊழியர் சேவையின் III ஆம் தரத்திற்கான நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு, 2026.12.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
இல. 19,
சைத்திய வீதி,
கொழும்பு 01.

04. பதவியின் தன்மை மற்றும் பணிக்கட்டமைப்பு:

I. இப்பதவி ஆரம்பநிலை தொழில்நுட்பமற்ற வகையைச் சேர்ந்த பதவியாகும்.

II. இது ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர நியமனமாகும்.

III. நீர் விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் முறைகளுக்கு ஏற்ப நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்தல் வேண்டும்.

IV. பதவியை பொறுப்பேற்ற நாளிலிருந்து 03 வருட பணிப் பரீட்சிப்பு காலத்திற்கு உட்படல் வேண்டும். சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் விளைத்திறன் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்திப்பெற வேண்டும்.

V. 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக, குறித்த ஏனைய அரச கரும மொழியில் / மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

VI. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிருவாகக் கோவைக்கும், அரச நிதி விதி முறைகளுக்கும் அரசாங்கத்தின் ஏனைய விதிமுறைச் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கும் அவை தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்களுக்கும் கீழ்படிதல் வேண்டும்

05. நிறுவனங்களின் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் பேணிச்செல்வதற்கான பொது அடிப்படைத் தேவைகளுள் உரிய பகுதியளவிலான திறன் கொண்ட அல்லது தேர்ச்சி இன்றி நிறைவேற்றக் கூடிய அடிப்படைப் பணிகள் பொறுப்பளிக்கப்படும் பல்நோக்குச் சேவை வகையாகும்.

சேவை விதிகளுக்கேற்ப III ஆம் தரத்திற்குரிய பதவியாவது அலுவலக ஊழியர் பதவியாகும். இச்சேவை விடயத்திற்குரிய எந்தவொரு செயற்பாட்டையும் நிறுவனத் தலைவர் / நியமன அலுவலகரினால் சேவை வகைக்கு கையளிக்கப்படும்

உதாரணங்கள் -

சாவிகள் தொடர்பான கடமைகள், கடிதங்கள் மற்றும் கோப்புகளைக் கொண்டு செல்லுதல், தேவைக்கேற்ப துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளுதல், நிழற்படப் பிரதிகளைப் பெறுவதற்கு உதவுதல்,தொலைநகல் (Fax) செய்திகள் தொடர்பான பணிகள், மற்றும் நிறுவனம் தொடர்பாக ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

06. **சேவை நிபந்தனைகள்:**

I. நியமனம் பெற்ற முதலாவது சேவை நிலையத்தில் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாகப் பணியாற்ற வேண்டுமென்பதோடு, நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதாவது விசேட காரணங்களின் அடிப்படையில், அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் யாராவது அதிகாரி ஒருவரை இடமாற்றம் செய்வதற்கான தேவையேற்படின் நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உள்ளது.

II. இந்நியமனம் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், நிறுவனக் கோவையின் ஒழுங்கு விதிகள் மற்றும் அலுவலக ஊழியர் சேவையின் விதிமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களும் பொருந்துகின்றது.

07. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாது மற்றும் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ள நிரந்தரம் மற்றும் ஓய்வூதியத்துடன் கூடிய நியமனதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.

III. சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

IV. சகல விண்ணப்பதாரிகள் அனைவரும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

VI. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் V ஆம் அத்தியாயத்திற்கேற்ப அரச சேவையில் நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்ற நபராக இருத்தல் கூடாது.

VII. பதவிக்குரிய அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

குறிப்பு:

இந்த ஆட்சேர்ப்பு அலுவலகப் பணியாளர் சேவையின் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே மேற்கொள்ளப்படுவதால், உயர்கல்வி அல்லது தொழில்சார் தகைமைகளைப் பெற்றிருப்பின் அடிப்படையில், அலுவலக ஊழியர் சேவையின் சேவை யாப்பிற்கு புறம்பாக முறையான விதிமுறையொன்று இன்றி வேறொரு சம்பளத்தைப் பெறுவதற்கோ அல்லது அத்தகைய சம்பளக் கட்டமைப்பைக் கொண்ட பதவியொன்றிற்கு நியமனம் பெறுவதற்கோ உரிமை கிடையாது என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

08. **ஆட்சேர்ப்பு செயன்முறை**

நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடத்தப்படும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் வரிசை துல்லியமான முறையை பின்பற்றி, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் அலுவலக ஊழியர்

சேவையின் III ஆம் தர அலுவலக ஊழியர் பதவிக்கு நியமிக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பும் மொழியை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டுமென்பதோடு, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அந்த மொழி மூலம் நடாத்தப்படும்.

1. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை:

	அளவுகோள்		புள்ளிகள்
01	கல்வித் தகைமைகள்	க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்	5
		கா.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதம், மொழி, இரண்டாம் அரச கரும மொழி, ஆங்கில மொழி மற்றும் வேறு ஒரு பாடத்தில் திறமை சித்தி பெற்றிருத்தல். (ஒவ்வொரு பாடத்திற்கும் 02 புள்ளிகள் வீதம், அதிகபட்சமாக 5 பாடங்கள் கருத்தில் கொள்ளப்படும்.)	10
02	பெற்றுள்ள தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்		10
03	வெளிப்புச்செயற்பாடுகள் (விளையாட்டு / சமூக சேவைகள் ஆகியன)		10
04	ஆளுமை மற்றும் தொடர்பாடல்		10
05	நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள்		5
	மொத்தப் புள்ளிகள்		50

09. **சம்பளம்:**

I. சம்பளக் குறியீடு -PL-1-2025

II. III, II மற்றும் I ஆம் தரங்களுக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம்- ரூபா. 40,000 - 10 X450-10 X 490-10 X 540-12 X 590-61,880/= ஆகும்.
(2027.01.01 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 10/2025 இற்கேற்ப சம்பளம் செலுத்தப்படும். அதுவரை இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இற்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் கணிக்கப்படும்.)

10. விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

I. பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று,

II. தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று

III. கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

IV. கிராம அலுவலரின் சான்றிதழ் (DS 04 படிவம்).

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அறிவித்தலிற்கேற்ப உரிய தகைமைகள் உள்ளனவா என பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில் உரிய தகைமைகள் இல்லையென தெரியவந்தால், அவ் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

12. அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்ட திட்டங்களுக்கு அமைவாகச் செயற்படக் கடமைப்பட்டுள்ளனர்.

13. பிழையான தகவல்களை வழங்குதல் :

I. விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாகவும் சரியான தகவல்களையும் வழங்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பான விதிமுறைகளிற்கேற்ப, எவரேனுமொரு விண்ணப்பதாரரொருவர் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தகுதியற்றவர் என அறியக்கிடைத்தால், நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ அல்லது நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலோ அல்லது
அதன் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது / அவளது விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படலாம்.

II. விண்ணப்பதாரனால் வழங்கப்பட்ட தகவல்கள் பிற்காலத்தில் தவறானவை என அறியக்கிடைத்தாலோ அல்லது அவர் / அவள் வேண்டுமென்றே ஏதேனும் விடயத்தை மறைத்திருப்பது தெரியவந்தாலோ, அவருக்கு / அவளுக்கு தொடர்ந்து நியமனம் வழங்குவது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதோடு, இந்நேர்முகப் பரீட்சையின் மூலம் வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்வதற்கு அல்லது அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவார்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப்பெயர்ப்புகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் காணப்பட்டால், சிங்கள மொழிப்பெயர்ப்பு நடைமுறையில் இருக்கும்.

15. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக அல்லது ஆட்சேர்ப்பு விதிமுறையினுள் ஏதேனும் சிக்கலான நிலையை ஏற்பட்டால் அல்லது அது தொடர்பில் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைக்கேற்ப,
அமைச்சின் செயலாளர்

2026 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி
துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
இல. 19,
சைத்திய வீதி,
கொழும்பு 01.

Gazette.lk SINCE 1948 AMBITIONS REALIZED